


**12.11. 2024**

தலைப்பு செய்திகள்

1. பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் நவீன தொழில்நுட்பங்கள் கையாள்வது அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

2. இந்தியா வளர்ந்த நாடாக உருவெடுக்க தரமான கல்வியே உந்துசக்தியாக திகழ்கிறது என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் சர்வதேச வர்த்தக சந்தைகளை அணுக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. நாகை மாவட்டம் அக்கரை பேட்டையை சேர்ந்த 12 மீனவர்களை இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்துள்ளனர்.

5. ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பை போட்டியில் இன்றுமாலை இந்தியா - தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

பாதுகாப்பு அச்சுறுத்தல் சவால்களை எதிர்கொள்ள தகவமைப்பு தொழில்நுட்ப நிலைப்பாடுகளின் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்பு பேச்சுவார்த்தைகள் நிகழ்வில் இன்று உரையாற்றியஅவர், தகவமைப்பு நிலைபாடுகள் என்பது தற்போதைய தேவை என்றும் சுட்டிக்காட்டினார்.

நம்நாட்டின் தகவமைப்பு பாதுகாப்பு தொலைநோக்கு பார்வை, படைப்பாற்றல் திறன், வலுவான கட்டமைப்பு, நெகழ்வுத் தன்மையின் அடிப்படையில் அமையவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்கால சவால்களை எதிர்கொள்ள தேசம் தயார் நிலையில் இருக்கவேண்டியது அவசியம் என்றும் திரு. ராஜ்நாத்சிங் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

தர்மேந்திர பிரதான்

வளர்ந்த நாடாக வரும் 2047-ம் ஆண்டு இந்தியா உருவாக கல்வியே சிறந்த பாதை என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உயர் தொழில்நுட்ப கல்வி தொடர்பான தேசிய கருத்தரங்கில் இன்று உரையாற்றியஅவர், கட்டமைப்பு, தலைமைப் பண்பு, பாடத்திட்டம், பல்துறை ஆராய்ச்சி, எழுச்சிமிகு வளாக கற்றல்முறைகள் ஆகிய ஐந்தும், கல்வித்துறையின் முக்கிய அம்சங்களாகும என சுட்டிக்காட்டினார்

இக்கருத்தரங்கில் பங்கேற்ற மாநில யூனியன் பிரதேச பிரதிநிதிகள் தேசிய கல்விக்கொள்கை 2020-ஐ தத்தம் பகுதிகளில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அம்மாநிலத்தின் தேவை அடிப்படையில் பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்

தேசிய கல்விக் கொள்கையின் கீழ், இணைபாடத் திட்டங்களான விளையாட்டு, விவாதம், கவிதை, நாடகம் போன்றவை தொழில் கல்வி பாடத்திட்டத்தில் கொண்டுவரப் பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

தாய்மொழி கல்வியின் அவசியத்தை வலியுறுத்திய அவர், தேசிய மதிப்பீட்டு முறை, நுழைவுத்தேர்வு அடிப்படையிலான சேர்க்கை, தேசிய ஆராய்ச்சி போன்ற கல்வி சீர்த்திருத்தங்களுக்கு மாநிலங்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

2 நாட்கள் நடைபெறும் இக்கருத்தரங்கில் தேசிய கல்விக்கொள்கை 2020-ஐ செயல்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகள் குறித்து விரிவாக கலந்தாலோசிக்கப் படவுள்ளது.

❖❖❖❖❖❖❖

தேர்தல்

ஜார்கண்ட் மாநிலத்தில் 43 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு முதற்கட்டமாக நாளை நடைபெறும் வாக்குப் பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இத்தேர்தலில் 683 வேட்பாளர்களின் வெற்றியை ஒருகோடியே 37 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நிர்ணயிக்கவுள்ளனர்.

200 கம்பெனிகளை சேர்ந்த துணை ராணுவ படையினர் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

225 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ள நிலையில், 194 வாக்குச் சாவடிகளுக்கு விமானப்படை ஹெலிகாப்டர்கள் மூலம் தேர்தல் அலுவலர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தேர்தலுடன் கேரள மாநிலம் வயநாடு மக்களவை தொகுதி மற்றும் 11 மாநிலங்களின்,
33 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் நாளை நடைபெறுகிறது

இதன்படி ராஜஸ்தானில் - 7 சட்டப்பேரவை தொகுதிகள், மேற்குவங்கம் - 6, அசாம் - 5, பீஹார் - 4, கர்நாடகா - 3, மத்திய பிரதேசம், சிக்கிம் மாநிலங்களில் தலா 2, கேரளா, சட்டீஸ்கர், குஜராத், மேகாலயா மாநிலங்களில் தலா ஒரு சட்டப்பேரவை தொகுதிக்கு நாளை இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இதனிடையே மஹாராஷ்டிரா மாநிலத்தில் 288 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரேகட்டமாக வரும் 20-ம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

❖❖❖❖❖❖❖

பொதுசேவை ஒலிபரப்பு தினம்

பொதுசேவை ஒலிபரப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1947-ம் ஆண்டு தேசப்பிதா மகாத்மா காந்தி, தில்லி அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து நாட்டு மக்களிடம் உரையாற்றியதை நினைவுகூறும் வகையில் இதே தினத்தில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

குருஷேத்ரா முகாமிலிருந்து அகதிகளுக்காக தேசபிதா ஆற்றிய அவரது உரையை வானொலியில் ஒரே நேரடி உரையாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 64 அரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் 17 ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடங்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்

திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, தேனி, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடங்கள் இதில் அடங்கும்.

இதனிடையே முதலமைச்சர் வரும் 14, 15 தேதிகளில் அரியலூர் பெரம்பலூர், மாவட்டங்களில் களஆய்வு மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

உதயநிதி - மழை ஆய்வு

சென்னையில் தொடர்மழை பெய்துவரும் நிலையில் மழைவெள்ளம் தேங்காத வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக துணை முதலமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையில் மழை வெள்ள நிலவரத்தை இன்று ஆய்வுசெய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், கூடுதல் மோட்டார் பம்புகள் தயார்நிலையில் உள்ளதாகவும் கூறினார்.

329 நிவாரண முகாம்களும் 120 உணவு தயாரிப்பு மையங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ரயில்வே மேம்பால பணிகள் நடைபெறும் கணேசபுரம் சுரங்கப்பாதை தவிர எஞ்சிய 21 சுரங்கப்பாதைகளிலும் போக்குவரத்து வழக்கம் போல் நடைபெறுவதாக அவர் கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

உதய நிதி

இதனிடையே சென்னை ஐ.ஐ.டி வளாகத்தில் தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்க இயக்கம் சார்பில் புதிய திட்டத்தை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் சர்வதேச வர்த்தக சந்தைகளை அணுக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறினார்

மாற்றுத்திறனாளிகளும், திருநங்கைகளும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை தொடங்க நிதியுதவி அளிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

பேரிடர் மேலாண்மை

தமிழ்நாட்டில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை உத்தரவிட்டுள்ளது.

கனமழை சூழலை முறையாக கையாளும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைத்திருக்க இத்துறை அறிவுறுத்தியுள்ளது.

அனைத்து துறைகளும் இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் பேரிடர் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

டி.ஆர்.பி. ராஜா

டெல்டா மாவட்டங்களில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் நாகையில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

நாகையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தொழில் பூங்காக்கள் மூலம் தொழில்வளர்ச்சி ஏற்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக கிழக்கு கடற்கரை சாலை செல்லூர் பகுதியில் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான இடத்தினை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழியுடன் இணைந்து திரு. டி.ஆர்.பி. ராஜா ஆய்வுமேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

கோவி.செழியன்

உயர்கல்வி நிறுவனங்கள் குறித்த தகவல்களை பெற வகை செய்யும்' ஹெல்ப் டெஸ்க் உதவி மையம் தமிழகத்தில் அமைக்கப்பட்டுவருதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் இத்தகைய உதவி மையத்தை இன்று துவக்கி வைத்து பேசிய அமைச்சர், உயர்கல்வி நிறுவனங்களை மாணாக்கரும்,

பெற்றோர்களும் எளிதில் அணுகி உரிய விவரங்களை பெற இது பெரிதும் பயனளிக்கும் என்று குறிப்பிட்டார்.

இணையவழி, தொலைபேசி வழியாக கோரப்படும் தகவல்கள் மற்றும் நேரடியாக பெறப்படும் தகவல்கள் என மூன்றையும் ஒருங்கிணைத்து இம்மையம் செயல்பட வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

இவ்வாறு பெறப்படும் கோரிக்கை குறித்த விவரங்கள் பதிவுசெய்து, அதனை கண்காணிக்க வேண்டுமென்றும் திரு. கோபி. செழியன் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

அஞ்சல் துறை கண்காட்சி

கோவை பீளமேட்டில் அஞ்சல் துறை சார்பில், அஞ்சல்தலை சேகரிப்பு கண்காட்சி இன்று தொடங்கியது.

2 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அஞ்சல்தலைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கோவை பெக்ஸ் சிறப்பு தபால்உறை சூழலியல் விஞ்ஞானி டாக்டர் சலீம் அலி சிறப்பு தபால்உறை உள்ளிட்டவை இன்று வெளியிடப்பட்டன.

பல்வேறு நாடுகளின் நாணயங்களும் விற்பனைக்காக இதில் இடம்பெற்றுள்ளன.

❖❖❖❖❖❖❖

மீனவர்கள்

நாகை மாவட்டம் அக்கரை பேட்டையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 12 மீனவர்களை இலங்கை முல்லை தீவு அருகே எல்லைத்தாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் இன்று அதிகாலை பிடித்துச் சென்றனர்.

இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட விசைபடகு மைலட்டி துறைமுகத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு விசாரணை நடைபெறுவதாக எமது நாகை செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் கடனுதவிகளை தகுதியுடையோர் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு. பழனி தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் தென்னை சாகுபடி விவசாயிகள் பயிர்காப்பீடு செய்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் அறிவுறுத்தியுள்ளார்.

தஞ்சையில் நாளை நடைபெறவுள்ள முன்னாள் படைவீரர் ஓய்வூதிய குறைதீர் முகாமில் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ்பச்சாவ் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

வானிலை

தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, வடதமிழகம் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளில் நிலவுவதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் கன, மிக கனமழையும்,

காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் கனமழையும் இன்று பெய்யக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் வங்ககடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

ஹாக்கி

ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன்பட்ட போட்டியில் இன்றுமாலை இந்தியா - தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

20-20 கிரிக்கெட்

இந்திய - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான 3-வது 20-20 கிரிக்கெட் போட்டி செஞ்சூரியனில் நாளை நடைபெறுகிறது.

4 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒருபோட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன.

4-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி ஜோஹன்னஸ் பர்க்கில் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.